Institute of Agricultural Economics

* 212 *Q*.—THIRU B. VENKATASWAMY: Will the Hon. the Minister for Food and Agriculture be pleased to state—

(*a*) whether there is any institute like "Institute of Agricultural Economics" in our State; and

(*b*) if not whether the Government will come forward to open such institution?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி ::

(அ) இல்லை. இருப்பினும் வேளாண்மைப் பொருளாதாரம் இம் மாநிலத்தில் வேளாண்மைக் கல்லூரிகளில் கற்பிக்கப்படும் பாடங்களில் ஒன்றாக இருக்கிறது.

(இ) அத்தகைய செயற்குறிப்பு எதுவும் தற்போது அரசாங்கத்தின் ஆலோசனையில் இல்லை.

THIRU K. S. KOTHANDARAMIAH: If it is not possible to start a separate institution to teach the subject, will the Hon. Minister be pleased to state whether he will include this subject in the existing colleges?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி: இப்பொழுது இருக்கும் வேளாண்மைக் கல்லூரியில் பி.எஸ்.ஸி. பைனல் இயரில் இந்தப் பாடம் சொல்லிக் கொடுக்கப்படுகிறது. எம். எஸ்ஸி. பைனல் இயரிலும் இந்தப் பாடம் சொல்லிக்கொடுக்கப்படுகிறது.

செவிலியர்களுக்கு வழங்கப்படும் உணவு.

*** 213** வினா—**திரு. கொளத்தூர் கோதண்டம்:** மாண்புமிகு பொதுச் சுகாதார அரிசன நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

சென்னை ஜெனரல் ஆஸ்பத்திரியில் பணிபுரியும் நர்சுகளுக்குப் போடப் படும் உணவின் தரத்தை உயர்த்த சர்க்கார் மேற்கொள்ளப்போகும் நடவடிக்கைகள் யாவை

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து:

இது அரசாங்கத்தின் பரிசீலனையில் உள்ளது.

திரு. கொளத்தூர் கோதண்டம்: அங்கு காண்ட்ராக்ட் மூலமாக உணவுப் பொருள்கள் வழங்கப்பட்டு உள்ளே உணவாக மாற்றப்படுகிறது. அங்கே உணவாக மாற்றப்படும்போது நீண்ட காலமாகப் பணிபுரிகிறவர்கள் இருக்கிற காரணத்தால் அந்த உணவுப் பொருள்கள் திருடு போகிறது என்ற புகார்கள் சொல்லப்படுகின்றன. ஆகவே, உணவாகவே சப்ளை செய் வதற்கு காண்ட்ராக்ட் பெற உத்தேசம் உண்டா?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: காண்ட்ராக்ட் மூலம் உணவுப் பொருள்கள்தான் தரப்படுகிறது. அது அங்கே சமையல் செய்யப்பட்டு வழங்கப்படுகிறது. அது ஒழுங்காக நடைபெறுகிறதா என்பதை மேற்பார்வையிட வார்டன், ஹவுஸ்கீப்பர் ஆகியோர் இருக்கிறார்கள். அவர்கள் மேற்பார்வையில் அது ஒழுங்காக நடைபெற்று வருகிறது.

டாக்டர் எச். வி. ஹாண்டே: இப்போது நர்சுகளின் நிலைமை மிக மோசமாக இருக்கிறது என்பதை இந்த அரசாங்கம் உணருகிறதா? அண்மையில் சில நர்சுகளுக்கு மஞ்சள் காமாலை நோய் வந்து நான்கு பேர்கள் இறந்து விட்டார்கள். அந்த வகையில் நர்சுகளுக்குச் சரியாக

உணவு போடப்படவில்லை என்று நர்சுகளிடமிருந்தே புகார்கள் அரசாங்கத்திற்கு வந்திருக்கின்றனவா ? இதைச் சீர்திருத்திச் செம்மைப்படுத்த அரசாங்கம் முடிவு செய்திருக்கிறதா ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : நர்சுகளுக்கு போடப்படுகிற உணவின் தரத்தைப்பற்றிய கேள்வி இது. உணவின் தரத்தில் குறைபாடுகள் இருப்பதாக நர்சுகளிடமிருந்து தகவல் ஒன்றும் வரவில்லை. தரப்படுகின்ற உணவு சில நேரத்தில் அவர்களுக்குச் சரியானதாக இல்லை. நீண்ட காலத்திற்கு முன்பு நிர்ணயித்த உணவுத் திட்டத்தின்படி அளிக்கப்பட்டு வருகிறது. கூடுமான வரையில் இன்றைய நிலைக்கு ஏற்ற வகையில் காண்ட்ராக்ட்காரர்களிடமிருந்து தரமான உணவுப் பொருள்களைப் பெற முயற்சி எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கிறது. அவர்கள் அந்த விலையை அதிகமாக்க வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். நோய்களுக்குக் காரணமான உணவு கொடுக்கப்படுகிறது என்ற புகார் எதுவும் வந்ததாகத் தெரியவில்லை. குறிப்பாக நர்சுகளிடம் இருந்து வந்ததாகத் தகவல் இல்லை.

திரு. நா. காசிராமன் : நர்சுகளுக்குக் கொடுக்கப்படும் உணவுக்காக உணவுப் பொருள்களை காண்ட்ராக்ட்மூலம் பெறுவதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அவ்வாறு காண்ட்ராக்ட்மூலமாகப் பெறுவதைத் தவிர்த்து அரசாங்கக் கூட்டுறவுச் சங்கங்கள்மூலம், சூப்பர் மார்க்கட்மூலம் நேரடியாகப் பெறுவதற்கு வழி செய்தால் லாபகரமாக இருப்பதோடு நல்ல பண்டங்களாகவும் இருக்குமல்லவா ? இதைச் செய்ய அரசாங்கம் முன் வருமா ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : காண்ட்ராக்ட்காரர்களால் தரப்படுகின்ற உணவுப் பொருள்கள்கூட தரக்குறைவாக இருக்கிறதா என்பது அவ்வப்போது பரிசீலிக்கப்படுகிறது. கிண்டி இன்ஸ்டிட்யூட்டுக்கு இந்தப் பொருள்கள் அனுப்பப்பட்டுக் கலப்படம் இருக்கிறதா என்பது பரிசீலனை செய்யப்படுகிறது. அப்படி கலப்படமோ, குறைபாடோ இருக்குமானால் காண்ட்ராக்ட்காரர்களிடமிருந்து அதற்குரிய தொகை கூடத் திரும்பப் பெறப்படுகிறது. அவர்கள் இப்போது இருக்கின்ற விலையைச் சற்றுக் கூட்டித் தரவேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். அது இப்போது அரசாங்கத்தின் பரிசீலனையில் இருந்து வருகிறது.

THIRU K. VINAYAKAM : Sir, whereas we entirely agree with the Government that the standard of food should be raised as far as nurses are concerned, do the Government feel that the House Surgeons who are working in these hospitals from morning till night and especially during the days of admission when they have to do responsible work, are also given food?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வி எங்கேயோ போகிறதே ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : கொடுக்கப்பட்டிருக்கின்ற கேள்வி நர்சுகளைப் பற்றியது. ஹவுஸ் சர்ஜன்களைப்பற்றி அவர்களே வந்து கேட்டால் பரிசீலிக்கலாம். அவர்கள் சார்பிலே கனம் உறுப்பினர் அவர்கள் கோரிக்கை கொடுத்தாலும் பரிசீலிக்கலாம்.

திரு. என். வரதராஜன் : இந்தச் செவிலியர்களுக்காகக் கொடுக்கப்படும்படியான உணவுப் பொருள்கள் திருடுபோய் விடுவதால் கஷ்டம் ஏற்படுகிறது என்ற புகார் பலமாக எழுப்பப்பட்டு வருகிற இந்த நேரத்தில் செவிலியர்கள் குழு ஒன்றை அமைத்துக் கண்காணிப்பதற்கு அரசாட்சி அனுமதி அளிக்குமா ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : இப்போதே இவற்றை மேற்பார்வை செய்கிறவர்களில் வார்டன், ஹவுஸ்கீப்பர், ஒரு நர்ஸ் ஆகிய மூன்று பேர்கள் இருக்கிறார்கள். செவிலியர்களின் சார்பாக ஒரு செவிலியர் அந்தக் குழுவில் இருக்கிறார். ஆகவே, தனியான ஒரு குழு அமைக்க வேண்டிய அவசியம் இல்லை.